சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No.OS.111/2019  PW1

**2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் நாள் செவ்வாய்கிழமை**

வாதித்தரப்பு சாட்சியாகிய வா.சா.1இன் வாக்குமூலம் ஆக்ட் 10/1873ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.M.தீபா, எழுத்தர் நிலை–II என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புருஷோத்தம்மன் | தொழில் | விவசாயம் |
| த/பெயர் | லேட்.சண்முகம் | ஜாதி | |
| கிராமம் | முள்ளிப்பட்டு | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 56 |

**<u>28.04.2026 முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றி முழு விவரம் எனக்கு தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக,

12.06.1978ம் தேதியிட்ட பாகப்பிரிவுனை ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. 26.11.1993ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு அவரது மகள்கள் எழுதிக்கொடுத்த பாக விடுதலைபத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.05.1999 ம் தேதியிட்ட வாதியின் சகோதரர் விஜயக்குமார் என்பவரின் திருமணஅழைப்பிதழ் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.05,1999 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.06.1999 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.02.2004 ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி ராகுல் என்பவருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.03.2004ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.01.2007 ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.03.2018 ம் தேதியிட்ட இணையதள வில்லங்கசான்று நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.09.2018 ம் தேதியிட்ட

வாதி தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.09.2018 தேதியிட்ட 1ம் பிரதிவாதி தரப்பு பதிலறிவிப்பு **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.09.2018 தேதியிட்ட 2ம் பிரதிவாதி தரப்பு பதிலறிவிப்பு **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்திற்கான தோராய வரைபடம் **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.05.2020ம் தேதியிட்ட சண்முகம் என்பவரின் இறப்பு சான்று **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி குடியிருக்கும் வீட்டிற்கான மின்கட்டண அட்டை **வா.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.09.2022 ம் தேதி வாதி குடியிருக்கும் வீட்டிற்கான மின்கட்டண ரசீது **வா.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.03.2023 ம் தேதி வாதி குடியிருக்கும் வீட்டிற்கான வீட்டு வரி ரசீது (எண்ணிக்கை 3) **வா.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.03.2023 ம் தேதி வாதி குடியிருக்கும் வீட்டிற்கான குடிநீர் கட்டண ரசீது **வா.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.03.2023 ம் தேதி வாதி குடியிருக்கும் வீட்டிற்கான பல்வகை வரி ரசீது **வா.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.01.2004ம் தேதியிட்ட வாதியின் சகோதரர் விஜயக்குமார் இறப்பு சான்று **வா.சா.ஆ. 22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.03.2006ம் தேதியிட்ட வாதியின் இடத்தில் சாலை அமைப்பதற்காக எழுதிக்கொடுக்கப்பட்ட கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.02.2010ம் தேதியிட்ட வாதியின் பெற்றோர்கள் கிரையம் பெற்ற ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.04.2014ம் தேதியிட்ட வாதியின் தந்தையின் சகோதரர் அருணகிரி முதலியாரும், அவருடைய வாரிசுகளும் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.03.2024ம் தேதியிட்ட வாதி குடியிருக்கும் வீட்டுவரி ரசீது **வா.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி கும்பகோணம் துகிலி கிராமத்தில் வசித்தபோது அவரது தந்தை அனுப்பிய கடிதங்கள் (எண்ணிக்கை -6) **வா.சா.ஆ. 27** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**( வா.சா.ஆ.17 முதல் 21, 26 ஆகியவை வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லாதவை என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கப்படுகிறது. )**

வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.